


# 23.06.2026 செய்திகள்

## நடைபாதை அடிப்படை உரிமை

- தெளிவாக வரையறுக்கப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்ட நடைபாதைகளில் நடப்பது என்பது பாதசாரிகளின் அடிப்படை உரிமை என்று உச்சநீதிமன்றத்தின் நீதிபதி பி.எஸ்.நரசிம்மா, ஏ.எஸ்.சத்துர்கர் அடங்கிய அமர்வு தெரிவித்திருக்கிறது. வாகனப் போக்குவரத்துக்கு சாலைகள் அமைப்பதைவிட, பாதசாரிகள் நடப்பதற்கான நடைமேடைகளை அமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்கிறது அந்த உத்தரவு.

» வழக்கு

- கர்நாடகத்தைச் சேர்ந்த 5 வயதுச் சிறுவன் தனது தந்தையுடன் பள்ளிக்கு நடந்து சென்று கொண்டிருந்தபோது டேங்கர் லாரி மோதி உயிரிழந்தார். இந்த விபத்து தொடர்பாக அதிக இழப்பீடு கோரி உச்சநீதிமன்றத்தில் நடைபெற்ற மேல்முறையீட்டு வழக்கின் விசாரணையின்போது இந்தத் தீர்ப்பை உச்சநீதிமன்ற நீதிபதிகள் வழங்கினார்கள்.
- சாலையில் விசாலமான நடைபாதை இருப்பதை உறுதி செய்வது கிராம ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி, நகர்ப்புற மேம்பாட்டு அமைப்புகளின் கடமையாகும்.
- பொதுமக்கள் பாதுகாப்பாக நடப்பது என்பது அடிப்படை உரிமை என அரசமைப்புச் சட்டமும் அங்கீகரித்துள்ளது உறுதி அளித்துள்ளது என்று நீதிபதிகள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.
- அரசுகள் சாலைகளை அகலப்படுத்தினாலும் விரைவுச்சாலைகளை அமைத்தாலும் வாகனப் போக்குவரத்துக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனவே தவிரப் பாதசாரிகள் குறித்து கவலைப்படுவதில்லை.
- வாகன ஓட்டிகளும் நடப்பவர்களை இடையூறாக கருதும் போக்கு அதிகரித்து விட்டது. நடைமேடை என்பது குடிமக்களுக்கு கடமைப்பட்டுள்ள நகராட்சி அமைப்புகளின் குறைந்தபட்ச கடமை. எல்லா சாலைகளிலும் நடைமேடை அமைப்பது தொடர்பாக மத்திய அரசு சட்டம் இயற்ற வேண்டும் என்றும் அவர்கள் அந்தத் தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

» விபத்துகள்

- நடைபாதை உரிமையைப் பாதுகாப்பது, இழப்பீடுகள் குறித்த கொள்கைகள் வகுப்பது தொடர்பாக சட்ட ஆணையம் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை, ஊரக மேம்பாட்டுத்துறை, சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகங்கள் இதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.
- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகத்தின் புள்ளிவிவரப்படி, இந்தியாவில் 2024-ஆம் ஆண்டில் நிகழ்ந்த விபத்துகளில் கார் அல்லது இருசக்கர வாகனம் மோதி பாதசாரிகள் 19,680 பேர் உயிரிழந்துள்ளனர். விபத்துகளில் உயிரிழந்தவர்களில் இது 20.6 சதவீதமாகும். பாதசாரிகள் உயிரிழப்பில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. தமிழகத்தில் 4,712 பேரும், அதைத் தொடர்ந்து பீகாரில் 4,149 பேரும், மகாராஷ்டிரத்தில் 3,344 பேரும், மேற்கு வங்கத்தில் 3,241 பேரும் உயிரிழந்துள்ளனர்.
- நடைபாதை என்பது 4-5 அடி அளவுக்கு குறுகலாக இருக்கின்றன. அவை இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடங்களாகவும் கடைகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான நடைமேடைகள் முறையாகப் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன என்பதுடன், நடைபாதை வியாபாரிகள் ஆக்கிரமிப்பால் பாதசாரிகள் தெருவில் நடக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது.

SURESH'

- தேசம் முழுவதும் தடையின்றி சுதந்திரமாக பயணிக்கும் அடிப்படை உரிமையை வழங்கும் அரசமைப்புச் சட்டத்தின் 19(1) (4) பிரிவின் ஒரு பகுதியாகத்தான் நடைமேடைகளில் பாதுகாப்பாக நடக்கும் பாதசாரிகளின் உரிமையை நாம் காத்திட வேண்டும் என்கிற உச்சநீதிமன்றத்தின் கருத்து மிகவும் முக்கியமானது.
- தனியாகப் பிரித்து, முறையாகப் பராமரிக்கப்பட்ட நடைமேடைகளை சாலையின் இருபுறங்களிலும் அமைப்பது என்பது அந்த அடிப்படை உரிமையின் வரம்பில் வரும் என்று நீதிபதிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

» மேனகா காந்தி வழக்கு

- வாழ்வதற்கும் தனிநபர் சுதந்திரத்துக்குமான உரிமையை வழங்கும் அரசமைப்புச் சட்டத்தின் 21-ஆவது பிரிவின் வரம்பிலும் நடைமேடைகளிலும் நடைபாதைகளிலும் பாதுகாப்பாக நடப்பதற்கான உரிமை உட்படுகிறது.
- 1978-இல் மேனகா காந்தி வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மனித உரிமை, அடிப்படை உரிமை உள்ளிட்ட பிரச்சனைகளுக்கான திருப்புமுனையாக அமைந்தது.
- மேனகா காந்தியின் கடவுச்சீட்டை அன்றைய ஜனதா அரசு பறிமுதல் செய்து, முடக்கியதை அடுத்து அவர் தனது அடிப்படை உரிமையைக் கோரி உச்சநீதிமன்றத்தை அணுகினார்.
- அரசமைப்புச் சட்டம் உறுதியளிக்கும் 14-ஆவது பிரிவின் சமத்துவத்தையும், வெளிநாடுகளுக்குப் போக தனக்கு உரிமை வழங்கும் 21-ஆவது பிரிவையும், அரசின் நடவடிக்கை மீறுகிறது என்கிற மேனகா காந்தியின் வாதத்தை நீதிமன்றம் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டது.
- கைதிகளின் உரிமைகள், சுத்தமான சுற்றுச்சூழலுக்கான உரிமை, குடியிருப்பதற்கான உரிமை, 14 வயது வரை இலவசமாக கல்வி பெறுவதற்கான உரிமை, தன் மறைப்புக்கான (பிரைவசி) உரிமை உள்ளிட்ட பல உரிமைகளை உச்சநீதிமன்றம் அடிப்படை உரிமைகளின் வரம்புக்குள் கொண்டு வந்திருக்கிறது. அந்தப் பட்டியலில் இப்போது பாதசாரிகள் நடைமேடையில் நடப்பதற்கான உரிமையும் இணைகிறது.

## ஒரே நாடு; ஒரே ஜி.எஸ்.டி., பதிவு

- தற்போது பல மாநிலங்களில் தொழில் நடத்தும் நிறுவனங்கள், ஒவ்வொரு மாநிலத்திலும், தனித்தனியாக ஜி.எஸ்.டி., பதிவு பெற வேண்டியது கட்டாயமாக உள்ளது. இதை மாற்றி, நாடு முழுவதற்கும் பான் எனப்படும் நிரந்தர கணக்கு எண் அடிப்படையிலான ஒரே ஜி.எஸ்.டி., பதிவை அறிமுகப்படுத்த கவுபா குழு பரிந்துரைத்து உள்ளது.
- இந்த பரிந்துரை, நடப்பு நிதியாண்டிலேயே அமல்படுத்தக்கூடிய சீர்திருத்தங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளதுடன், மத்திய அரசின் பரிசீலனையிலும் உள்ளது.
- தற்போதைய முறையில், ஒரு நிறுவனம் பல மாநிலங்களில் செயல்பட்டால், ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனி ஜி.எஸ்.டி., பதிவு மற்றும் தனித்தனி வரி அறிக்கைகளை தாக்கல் செய்ய வேண்டியுள்ளது.
- இதனால் செலவுகளும் நிர்வாக சுமைகளும் அதிகம். இந்த நிலையில், ஒரே பான் எண்ணை அடிப்படையாக கொண்ட தேசிய அளவிலான ஜி.எஸ்.டி., பதிவு முறை அறிமுகமானால், பல மாநிலங்களில் செயல்படும் நிறுவனங்களுக்கான வரி நடைமுறைகள் எளிதாகும் என கூறப்படுகிறது.
- ஜி.எஸ்.டி., அமல்படுத்தப்பட்ட போது, மத்திய மற்றும் மாநில அரசுகள் விதித்து வந்த பல்வேறு மறைமுக வரிகள் ஒன்றிணைக்கப்பட்டன.
- மதிப்புக்கூட்டு வரி, சேவை வரி, மத்திய உற்பத்தி வரி, நுழைவு வரி உள்ளிட்ட பல வரிகள் ஜி.எஸ்.டி., அழைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன.
- மேலும், ஐ.டி.சி., எனப்படும் உள்ளீட்டு வரி வரவு முறையின் வாயிலாக, ஒரு பொருளின் உற்பத்தி மற்றும் விற்பனை தொடரின் ஒவ்வொரு கட்டத்திலும் கூடுதல் வரி மீது மீண்டும் வரி விதிக்கப்படும் நடைமுறை ரத்து செய்யப்பட்டது. இந்த சூழலில், தொழில் நிறுவனங்களின் செலவுகளை மேலும் குறைத்து, நாடு முழுவதும் ஒரே மாதிரியான வரி நடைமுறையை உருவாக்கும் நோக்கில், கவுபா குழுவின் பரிந்துரைப்படி ஒரே நாடு; ஒரே ஜி.எஸ்.டி., பதிவு என்ற அடுத்தக்கட்ட சீர்திருத்தத்தை அரசு பரிசீலித்து வருவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

» கவுபா குழு

SURESH' IAS ACADEMY

- தொழில் செய்வதை எளிதாக்குதல், வரி நடைமுறைகளை சீரமைத்தல், முதலீட்டு சூழலை மேம்படுத்துதல் மற்றும் நிர்வாக சிக்கல்களை குறைத்தல் தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதற்காக இந்த குழு அமைக்கப்பட்டது.

» சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்கள்

- பல மாநிலங்களில் செயல்படும் நிறுவனங்களுக்கு தனித்தனி ஜி.எஸ்.டி., பதிவுக்கு பதிலாக, ஒரே பான் எண் அடிப்படையில் பதிவு
- மாநில வாரியான வரி அறிக்கை தாக்கல் நடைமுறை குறையும்.
- நிறுவனங்களின் செலவு மற்றும் நிர்வாக சுமை குறையும்.
- ஒரே நாடு; ஒரே வரி; ஒரே சந்தை கொள்கையை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும்.
- பரிந்துரை தற்போது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.
- நடப்பு நிதியாண்டிலேயே அமல்படுத்தப்பட வாய்ப்பு

## வெப்பச் செயல்திட்டம் நடைமுறைக்கு வரட்டும்

- அதிகரித்துவரும் வெப்பத்தின் தாக்கத்தைப் பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்பு மூலம் கட்டுப்படுத்தவும், மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், 'தமிழ்நாடு மாநில வெப்பச் செயல்திட்டம் 2026'ஐ தமிழ்நாடு அரசு வெளியிட்டிருப்பது வரவேற்கத்தக்கது.
- உலக அளவில் காலநிலை மாற்றத்தால் விளையும் ஆபத்துகள் அதிகரித்து வருகின்றன. இதில் வெப்ப அலை காரணமாக இந்தியாவில் மட்டும் 1990-2015 காலக்கட்டத்தில் 25 ஆயிரம் வெப்பம் சார்ந்த மரணங்கள் பதிவாகியுள்ளன.
- குறிப்பாக 2024 கோடைக்காலத்தில் வரலாறு காணாத வெப்ப அலை வீசியதால் 23 மாநிலங்களில் 100 கோடிக்கும் அதிகமானோர் கடுமையான வெப்பத்தை எதிர்கொண்டனர்.
- தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வழக்கமாக ஏப்ரல், மே மாதங்களில் வெயில் கொளுத்தும். இம்மாதங்களில் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸைச் சில நாள்களே தாண்டும். ஆனால் கடந்த சில ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸைக் கடக்கும் நாள்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எல் நினோ போன்ற நிகழ்வுகளால் தீவிரமடைந்துவரும் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை இது நிரூபிக்கிறது.
- இந்தப் பின்னணியில் தமிழ்நாடு மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையம், 2025 ஜனவரியில் தமிழ்நாட்டுக்கான மாநில வெப்பச் செயல்திட்டத்தை உருவாக்கும் பணியை ஆற்றல், சுற்றுச்சூழல், தண்ணீருக்கான கவுன்சிலிடம் ஒப்படைத்தது.
- முதற்கட்டமாக சென்னை, திருச்சி, மதுரை, கோவை உள்ளிட்ட 11 நகரங்களுக்கான வெப்பச் செயல்திட்டம் கடந்த ஆகஸ்ட்டில் தொகுக்கப்பட்டது. முதல் கட்டத்தில் கிடைத்த அனுபவங்கள், கற்றல் அனுபவங்களை உள்வாங்கித் தற்போது மாநில வெப்பச் செயல்திட்டம் 337 பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின்படி நகர்ப்புறங்களில் மட்டுமல்லாமல் ஊரகப் பகுதிகளில் – கிராம அளவிலும், மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில், வார்டு அளவிலும் வெப்பத் தாக்கத்தின் பாதிப்புகள் துல்லியமாகக் கணக்கிடப்படும். குறிப்பாக குழந்தைகள், முதியவர்கள், கட்டிடத் தொழிலாளர்கள் என வெப்பத்தால் அதிகமாகப் பாதிக்கப்படக்கூடியவர்களின் நலன் மீது கூடுதல் அக்கறை செலுத்தப்படும்.
- இந்திய வானிலை ஆய்வு மையம் வழங்கும் தரவுகளின் அடிப்படையில் மாவட்ட நிர்வாகங்களுக்கும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நேரடியாக முன்னெச்சரிக்கை அனுப்பப்படும். இது சார்ந்த தரவுகளை ஒருங்கிணைப்பதில் ஏஐ தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும்.
- வெப்பம் தொடர்பான நோய்களைப் புரிந்துகொள்வது, நிர்வகிப்பது 'விரைவான குளிர்விப்பு' (rapid cooling) முறைகளுக்கான திட்டங்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல், வெப்ப அலையின் பாதிப்புகளை எதிர்கொள்ள மருத்துவமனைகள் மேற்கொள்ள வேண்டிய குறிப்பிட்ட ஆயத்தப் பணிகளுக்கான வழிகாட்டுதல்களையும் இத்திட்டம் வழங்குகிறது.
- வேளாண்மையில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்களும் பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றன. வெப்பத்தின் அபாயத்தில் இருந்து தப்பிக்க இயற்கையின் உபாயமான பசுமைப் பரப்பை அதிகரிக்க முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் இதில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

- சுகாதாரம், தொழிலாளர் நலன், நகர்ப்புற வளர்ச்சி, சுற்றுச்சூழல், பேரிடர் மேலாண்மை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து வெப்பச் செயல் வலைப்பின்னல் மூலம் பணிகள் கண்காணிக்கப்பட இருக்கின்றன.
- அக்கறையோடும் தொலைநோக்குப் பார்வையோடும் ஆய்வுக் கண்ணோட்டத்தோடும் இந்தச் செயல்திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதே நேரம் பெரும்பாலான அரசுச் செயல்திட்டங்கள், கொள்கைகள் முழுமையாகச் செயல் வடிவம் பெறுவதில்லை. மக்களின் வாழ்க்கை, ஒட்டுமொத்த பொருளாதார நிலை, எதிர்காலத்தை அடிப்படையாகக் கொண்ட மேற்கொண்ட விஷயத்தில் தமிழ்நாடு அரசு தாமதப்படுத்தாமல் உடனடியாக முழு வீச்சில் செயலாற்றத் தொடங்க வேண்டும்.

## மத்திய-மாநில உறவு : குழுக்கள் பரிந்துரைப்பது என்ன?

- மத்திய–மாநில உறவு குறித்து ஆராய்வதற்காக இதுவரை பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், இந்தியக் கூட்டாட்சிக் கட்டமைப்பை மறுசீரமைக்கவும் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையிலான குழுவைத் தமிழ்நாடு அரசு ஏப்ரல் 2025 இல் அமைந்திருந்த நிலையில், தனது முதல் தொகுதி அறிக்கையை பிப்ரவரி 2026 இல் தமிழக அரசிடம் அக்குழு சமர்ப்பித்தது.
- நீக்கங்கள், சேர்க்கைகளோடு ஏறத்தாழ 54 அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள், ஏழு சட்டத் திருத்தங்கள், புதுச் சட்டங்கள், ஒரு புது அட்டவணை ஆகியவை மத்திய – மாநில உறவு பற்றிய குரியன் ஜோசப் குழு அறிக்கையின் முதல் பகுதி பரிந்துரைகள்.
- இக்குழு, தன் சிந்தனைக்கு – கூட்டாட்சிக் கோட்பாட்டின் சம்பிரதாயமானவற்றோடு வேறு இரண்டு அடிப்படைகளையும் காட்டுகிறது : இன்றைய இந்தியா 1950களில் இருந்திருந்தால் நம் அரசமைப்புச் சட்டத்தின் போக்கே வேறாக இருந்திருக்கும் என்பது முதலாவது அடிப்படை.
- தேசப் பிரிவினையைத் தொடர்ந்து எழுந்த அச்சத்தால் ஒற்றை அரசுக்கான அம்சங்கள் அரசமைப்புச் சட்டத்தில் தூக்கலாகிவிட்டன. அறிக்கைக்கு இவ்வகைச் சிந்தனை அடிப்படையாவதால் மலைக்கவைக்கும் எண்ணிக்கையிலான அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை அதுவே நியாயப்படுத்திக் கொள்கிறது.

» மறுமுனைக்கு நகர்வு

- நம் அரசமைப்புச் சட்டத்தின் வரலாற்றை எளிமைப்படுத்திப் புரிந்து கொள்ளும் வழக்கத்துக்கு இந்த குழுவும் விலக்கல்ல. இது பற்றி 1967 மே, 13 ‘ஸ்வராஜ்யா’ இதழில் கே.சந்தானம் எழுதியிருந்தார்.
- அதில், 1946 இல், நாட்டின் தற்காப்பு, வெளி உறவு, தொலைத்தொடர்பு, இவற்றின் துணைப்பணிகள் – இந்த வரம்புக்குள்ளேயே மத்திய அரசு செயல்படலாம் என்கிற நோக்கத்தோடுதான் அரசமைப்பு நிர்ணய அவை தொடங்கியது.
- பிரிவினை தவிர்க்க முடியாது என்று ஆகி, பாகிஸ்தான் பிரிந்துபோக அனுமதித்தபோது, அரசமைப்பு நிர்ணய அவையின் உணர்வு எதிர்முனைக்குச் சென்றது.
- அது ஒற்றை அரசு முறையைக் கோராவிட்டாலும், பெரும் வலுவுள்ள மத்திய அரசுக்கான கோரிக்கைகள் எழுந்தன. இறுதியாக, இன்றைய அரசமைப்புச் சட்டம் உருவானது. இது கூட்டாட்சி அமைப்பு என அவர் குறிப்பிட்டிருந்தார்.
- இப்படி, அதீத வலுவுள்ள மத்திய அரசு என்பதிலிருந்து, இறுதியாகக் கூட்டாட்சி என்கிற மறுமுனைக்கு அரசியல் நிர்ணய அவை நகர்ந்தது.
- சூரியன் குழுவின் அணுகுமுறைக்கு இரண்டாவது அடிப்படை தாராளமய, உலகமயச் சீர்திருத்தங்கள். குழு இதை விரிவாகப் பேசியிருந்தால் காலத்தை முந்திக் கொண்ட ஒப்பற்ற அறிக்கை ஒன்று உருவாகியிருக்கலாம்.
- 1991 இல் அதீதக் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்ட பொருளாதாரத்தைப் போலவே கல்வியும் மத்திய, மாநில அரசுகளின் தேவைக்கு அதிகமான கட்டுப்பாட்டிலிருந்து விடுபட வேண்டும் என்பது குழுவின் பரிந்துரை.
- தாராளமயத்திலும் உலகமயத்திலும் தேசியம், தேசிய அரசு, தேசிய எல்லைகள் எல்லாம் தேய்ந்துபோய் வரலாற்று எச்சங்களாகிவிடும். மைய அரசின் பாரித்த அதிகாரங்களைச் சரியான அளவுக்குள் கொண்டுவருதல், மாநிலச் சுயாட்சி, அதிகாரப் பரவல் போன்றவை உலகமயச் சிந்தனைப் போக்கோடு எளிதில் பொருந்திக்கொள்ளும் நவீனங்கள்தான்.
- ஆனால், நாம் இங்கே ஒரு முரணைக் கவனிக்க வேண்டும். குழுவை அமைத்த தமிழக அரசியல் பழைய, இனச்சாயல், படிந்த, இருமையிலேயே நிலை கொண்டுள்ளது.
- இந்த முரண் காரணமாகவே குழுவின் சில பரிந்துரைகள் மத்திய–மாநில உறவுச் சிக்கலுக்குத் தீர்வாக அமையாமல் தமிழக அரசியல் தலைமையின் கசந்த எதிர்வினை என்கிற நிலையிலேயே உள்ளன.


TUTICORIN 99445 11344 | TIRUNELVELI 98942 41422 | RAMANATHAPURAM 75503 52916 | MADURAI 98431 10566 | CHENNAI 97555 52003 | COVAI 90433 10773 | TENKASI 98840 51717 | SALEM 95147 89102

SURESH' IAS ACADEMY

- அரசியல் தலைமைக்கு இந்த அறிக்கை கள அரசியல் திட்டம்; அறிக்கை அளித்த குழுவுக்கு இது மெய்யான அரசியல் சிந்தனை. இந்த இமுபறியை அறிக்கை முழுதும் காணலாம்.

» செடல்வாட் குழுவின் யதார்த்தம்

- மத்திய-மாநில உறவை ஆராய்ந்த எம்.சி.செடல்வாட் குழு 1967 அக்டோபரில் அறிக்கை அளித்தது. அதற்குச் சில மாதங்களுக்கு முன்பு நடந்த தேர்தலில் பிராந்தியக் கட்சியிடம் தோற்ற இந்திய தேசிய காங்கிரஸின் கடைசி தமிழக முதல்வர் எம்.பக்தவச்சலம் அக்குழுவின் முதல் உறுப்பினர்.
- செடல்வாட் குழுவின் சிறப்பு, அதன் யதார்த்த அணுகுமுறை, அதன் பார்வையில், அரசியலும் நிர்வாகமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க இயலுவது அல்ல. அரசியல்ரீதியாகத் தீர்மானிக்கப்பட்ட கொள்கைகளையும் திட்டங்களையும்தான் நிர்வாகம் செயல்படுத்துகிறது.
- மத்திய-மாநில உறவு என்பது அரசுகளுக்கு இடையிலான உறவே தவிர, கட்சிகளுக்கு இடையிலானது அல்ல. இந்த நிலையில்கூட இந்த உறவுக்கு அரசியல் சம்பந்தம் உண்டு. அதன் நுட்பங்கள் அரசமைப்புச் சட்டத்திலிருந்து பெறப்படுவதல்ல. அடிப்படையான பிரச்சினை மத்திய அரசியல் தலைமைக்கும் மாநில அரசியல் தலைமைக்கும் உள்ள உறவும், அது மத்திய – மாநில நிர்வாக உறவில் ஏற்படுத்தும் தாக்கமுமே. இப்படி விவாதிக்கும் செடல்வாட் குழு சட்டங்களையோ, அரசமைப்புச் சட்டத் திருத்தங்களையோ அதிகம் சார்ந்திருக்கவில்லை. இந்த யதார்த்தத்தை குரியன் குழுவின் பரிந்துரைகளில் காண இயலாது.

» அரசமைப்புச் சட்டத்தில் போதாமைகளா?

- குரியன் குழுவின் பரிந்துரைகள் மத்திய அரசு இருக்கும் பல இடங்களில் மாநில அரசை இருத்தி, அதற்குப் புது உரிமை களையும் கோருகிறது. இதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைத் தருகிறேன்.
- சட்டமன்றத் தேர்தலுக்கும் உள்ளாட்சித் தேர்தலுக்கும் சுயேச்சையான மாநிலத் தேர்தல் ஆணையம் வேண்டும். வாக்காளர் பட்டியலை அதுவே தயாரித்துப் பராமரிக்கும். இந்தப் பட்டியலை நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு இந்தியத் தேர்தல் ஆணையம் பயன்படுத்தலாம்.
- மாநிலச் சட்டமன்றம் பெரும்பான்மை வாக்கு வழியாகப் பரிந்துரைக்கும் மூன்று வெளி மாநில நபர்களில் ஒருவரை மாநில ஆளுநராகக் குடியரசுத் தலைவர் நியமிக்க வேண்டும்.
- சட்டமன்ற மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மைத் தீர்மானத்தின் வழியாக ஆளுநரை நீக்கலாம். 14 நாள்களுக்குள் இத்தீர்மானத்தைக் குடியரசுத் தலைவர் செயல்படுத்த வேண்டும்.
- உண்மையில் ஒரு மாநில முதல்வர் நியமிக்கும் இந்த ஆளுநர், எப்போதும் நடுநிலைமையோடு செயல்படுவார் என்கிற குரியன் குழு அனுமானத்தை ஏற்க இயலுமா?
- குரியன் குழு பரிந்துரைக்கும் திருத்தங்களை செடல்வாட் அறிக்கையின் பின்னணியில் ஆராய்வது பயனுள்ளதாகும். தன் அறிக்கையை செடல்வாட் இப்படி முடிக்கிறார் : 'நிர்வாகத் தேவைகளுக்கு நம் அரசமைப்புச் சட்டத்தில் போதாமை என்று எதுவும் இல்லை. யாரிடம் அதிகாரம் இருந்தாலும், அவர் நம் அரசமைப்புச் சட்டத்தைச் செயல்படுத்த நினைத்தால், அது வெற்றிகரமாகவே செயல்படும்'.
- 1967 ஏப்ரலில், பெங்களூரு கோகலே கல்வி நிலையத்தில், ராஜாஜி பிறந்தநாள் கொண்டாட்ட நிகழ்வில் உரையாற்றிய சந்தானம் இதையே எதிர்மறையாகச் சொன்னார் : 'நம் அரசமைப்புச் சட்டத்தில் முற்றிலும் தவறு என்றோ, குறை என்றோ எதுவும் இல்லை.
- சொல்லின் அர்த்தத்தோடும் அதன் உணர்வோடும் ஒன்றிப்போக மனமில்லாதவர்களால் திரிக்க முடியாத அரசமைப்புச் சட்டம் என்று எதுவும் கிடையாது'.
- முந்தைய காலத்துக்குப் பொருந்துவதுபோல், இது குரியன் குழுவுக்குப் பின்பும்கூடப் பொருந்தும். இறையாண்மை ஒட்டுமொத்த இந்திய மக்களிடம் உள்ளது.
- தேசிய இறையாண்மையை மாநில உரிமைகளோடு இசைவிப்பதுதான் கூட்டாட்சிக் கோட்பாடு. குரியன் குழு நிர்வாகச் சீர்திருத்தங்களையோ, வெறும் அரசமைப்புச் சட்டத் திருத்தங்களையோ கோரவில்லை.
- அதன் பரிந்துரைகள் அரசியல் சீர்திருத்தங்கள், அரசமைப்புச் சீர்திருத்தங்கள் இவற்றை விமர்சிக்க உதவும் அரசியல் வெளியில் இனிமேல்தான் இங்கே கட்சிகள் உருவாக வேண்டும்.